IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,

THIRUMANGALAM.

RLTOP.No.10/2021
DEPOSITION OF WITNESS

எ.ம.சா. 1சாட்சி முருகன் த.பெ. ஆறுமுகம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 27.02.2026 in accordance with the provisions of Act XX141.**

முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தாக்கல் செய்த சீராய்வு மனுவின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. மாண்புமிகு சார்புநீதிமன்றத்தில் தாக்கல் செய்த RCA7/2017 மனு 08.11.2022ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை எதிர்த்து 2023ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனுவானது கோப்பிற்கு எடுக்கப்படாமல் தாக்கல் மட்டுமே செய்யப்பட்டு SR நம்பர் மட்டுமே வழங்கப்பட்டது என்றால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு சீராய்வு மனுஎண் வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்படி சீராய்வு மனு எண்ணை குறிப்பிட்டு இவ்வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மேற்படி சீராய்வு மனுவில் நாங்கள் தாக்கல் செய்த மனுவை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்துள்ள எ.மா.சா.ஆ.6 ஆனது 2023ல் SR நம்பர் வழங்கப்பட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்றுவரை கோப்பிற்கு எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. எ.மா.சா.ஆ.6ல் குறிப்பிட்டுள்ள மனுவின் உள்ள விபரங்கள் தவறாக இருப்பதால்தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்படவில்லை என்றாலும், CRP நம்பர் வழங்கப்படவில்லை என்றாலும் என்றாலும் சரியல்ல. மேற்படி எ.மா.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்கு தேவையில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

4. மனுதாரர் குறிப்பிட்டுள்ளதின்பேரில் மனு ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றாலும் தாவா கட்டிடத்தில் இருந்து நான் வெளியேற கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.27 17:32:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.